# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 ஜுலை திங்கள் 31–ம் நாள் (31.07.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

<u>**தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பாக நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.**</u>

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சியில் சுமார் 35,000 மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் வழங்குவதற்கும், பொதுமக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான தெருவிளக்குகள் அமைப்பதற்கும், மின்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. மேற்காணும் இரண்டு அடிப்படை தேவைகளின் காரணங்களுக்காகத் தான் நகராட்சியால் மின்சாரம் செலவு செய்யப்பபட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் என்பது நகர மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதை கடமையாக கொண்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் 2015–ம் ஆண்டிற்கு 5/2015 மாதத்திற்கு ரூ.1,92,990/– கூடுதல் வைப்பு தொகையாக கேட்பு பெறப்பட்டது. பெறப்பட்ட கூடுதல் வைப்பு தொகையினை ரத்து செய்திட மாவட்ட நிர்வாகம் தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மற்றும் கண்காணிப்பு பொறியாளர் ஆகியோரை நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1226 நாள் 30.06.2015–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகையினை ரத்து செய்ய கேட்டு 06.07.2015–ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இந்நிலையில் 6/2015 மாதத்திற்கு ரூ.4,03,560/– ஐ செலுத்த கேட்டு கேட்பு பெறப்பட்டுள்ளது. குளச்சல் நகராட்சி நிர்வாகம் தெருவிளக்கு வசதி மற்றும் குடிநீர் வினியோகம் ஆகியவற்றை ஒரு பொது நல நோக்குடனும், பொதுமக்களின் அடிப்படை மற்றும் வாழ்வாதார உரிமைகளை பெற்றுத் தரும் நோக்குடனும் செயல்படும் பொதுத்துறை நிர்வாகம் ஆகும். தனியாரால் லாபம் ஈட்டுகின்ற நோக்குடன் செயல்படுகின்ற கம்பெனி அல்ல. எனவே இதுபோன்ற கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்தும் அளவிற்கு நிர்வாகத்தில் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் மேற்காணும் கூடுதல் வைப்புத் தொகை செலுத்துவதை ரத்து செய்திட மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மற்றும் கண்காணிப்பு பொறியாளர், நாகர்கோவில் ஆகியோரை நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண் : 1263 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

மத்திய கலால் துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண். வி/15/28/2013/ST நாள் 12.06.2015–ன்படி, நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள், கடைகள் ஆகியவற்றிற்கு செலுத்தப்படும் கேட்பிற்கு சேவை வரி செலுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2007–08 (01.06.2007 முதல் 2013–14 வரை) 12.36% ம், 2014–15 முதல் 14% வீதம் சேவை வரி பெற்று கலால் துறைக்கு செலுத்த தெரிவிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண். அ1/2524/2012)

**தீர்மான எண் : 1264 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 01.06.2007 முதல் 2011–2012 வரை உரிய காலத்தில் சேவை வரி கட்டணம் குத்தகைதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகையினை பிடித்தம் செய்யப்படாததால் கலால் துறைக்கு சேவை வரி செலுத்த

வில்லை. மேலும் தற்போது உதவி ஆணையர் கலால் துறை கடிதம் எண்.வி/15/28/2013/ST நாள் 12.06.2015–ன்படி, இந்நகராட்சிக்கு 01.06.2007 முதல் 2011–12 வரையுள்ள காலத்திற்கு கேட்பாக ரூ.10,87,779/–செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை பிடித்தம் செய்யப்படாததால் தொகையினை செலுத்த சாத்தியம் இல்லை என்பதால், சேவை வரி தொடர்பாக வழக்கறிஞர், திரு.சி.சங்கர், சென்னை என்பவர் மூலம் வழக்கு தொடர்ந்து வாதாடவும், மேலும் இதற்கான செலவுத் தொகை ரூ.1,35,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். அ1/2524/2012)

**தீர்மான எண் : 1265 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

உறுப்பினர் செயலர் (பொ) மாநில திட்டக்குழு, சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.4119/2014/R & DP/SPC நாள் 23.02.2015–ன்படி, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், ரூ.2.53.63.000/– மதிப்பீட்டில் ''மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்'' பணியின் கீழ் செயல்படுத்த வேண்டியுள்ளது. தினசரிச்சந்தை வளாகத்திலுள்ள தற்காலிக கடைகள், தரைப்பாக கடைகள் ஆகியவை இடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இக்கடைகளில் தினசரிச்சந்தையின் நுழைவுக்கட்டணம் மற்றும் தினசரி வாடகைத் தொகை நகராட்சி அலுவலகம் மூலமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கடைகள் இடிக்கப்படுவதால் நாள் ஒன்றுக்கு ரூ.1,170/– மூலம் நகராட்சி இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே மீன்பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடிகள் கட்டிடம் கட்டும் பணி முடியும் வரை இந்த தினசரி வசூல் தொகையினை 20.07.2015 முதல் கேட்பில் இருப்பில் ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மன்றப் பொருளில் தெரிவிக்கப்பட்டுள்ள தினசரிச்சந்தை வளாகத்திலுள்ள தற்காலிக கடைகள் மற்றும் தரைப்பாக கடைகளை இடிக்க அனுமதிக்கலாம்.

(2) மேற்படி கடைகளை இடிப்பதால் தினசரி வசூல் தொகை ரூ.1,170/–ஐ 20.07.2015 முதல் கடைகள் கட்டும் பணிமுடியும் வரை கேட்பில் இருந்து ரத்து செய்ய அனுமதிக்கலாம்.

(3) மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/336/2015)

**தீர்மான எண் : 1266 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN.74 V-3530 –ன் பழுதடைந்த 4 டயர்களுக்கு மாற்றாக கொள்முதல் செய்யப்பட்ட 4 புதிய டயர்களை வாகனத்தில் பொருத்தும் பணிக்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.880/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5030/2010)

**தீர்மான எண் : 1267 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள 25 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு கருவி (Water Purifier) அடிக்கடி பழுதடைவதால், மேற்படி கருவியின் வருடாந்திர பராமரிப்பிற்காக (AMC) நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Elite Aqua Services, Nagercoil. | ரூ. 5,500/– |
| 2. | M/s.Rani Home Water Filter, Nagercoil. | ரூ. 6,000/– |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.Elite Aqua Services, Nagercoil நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/1618/2015)

**தீர்மான எண் : 1268 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை 24.06.2015–ம் தேதிய தினகரன் நாளிதழின் குளச்சல் நகர சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் ரூ.9,310/– ஐ வழங்க கேட்டு நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2045/2012)

**தீர்மான எண் : 1269 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.74 V-3530 –ன் டயர்களும் மிக மோசமாக பழுதடைந்து, வாகனம் இயக்குவதில் சிரமம் ஏற்பட்டதால், டயர்களை மாற்றுவதற்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, நாகர்கோவில் அவர்களிடம் வாகன ஆய்வு மேற்கொண்டு, டயர்களை கழிவு செய்வதற்கு கழிவு சான்று பெறப்பட்டது. அதன் அடிப்படையில் அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, புதிதாக 4 டயர்களை கொள்முதல் செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.24,000/– க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s. அருள் டயர்ஸ், திங்கள் நகர் | ரூ. 23,360/– (5840 x 4 ) |
| 2. | M/s, அன்னை டயர்ஸ், ஆரல்வாய்மொழி | ரூ. 25,600/– (6400 x 4 ) |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.அருள் டயர்ஸ், திங்கள் நகர் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று, வினியோக உத்தரவு வழங்கியுள்ளதற்கும், மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மதிப்பீட்டுத் தொகை ரூ.24,000/–க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து நேரடியாக விலைப்புள்ளி பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. அருள் டயர்ஸ், திங்கள் நகர் நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) மேற்படி பணிக்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5030/2010)

**தீர்மான எண் : 1270 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

உறுப்பினர் செயலர் (பொ) மாநில திட்டக்குழு, சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.4119/2014/R&DP/SPC நாள் 23.02.2015–ன்படி, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், ரூ.2,53,63,000/– மதிப்பீட்டில் "மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்" பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் தீர்மானம் எண்.1140 நாள் 31.03.2015–ன்படி, இந்நகர்மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் ரூ.2,50,00,000/– மதிப்பீட்டிலான 4 சிப்பம் பணிகளுக்கு கடந்த 02.06.2015–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீதான மன்றத்தின் ஒப்புதல்

அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தத்தாரருக்கு Letter of Acceptance அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கு ஏதுவாக டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், ஏற்கனவே அமைந்துள்ள மீன் சந்தையினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு, புதிய நவீன மீன் சந்தைக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பழைய மீன் சந்தை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பழைய மீன் சந்தை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். இ1/1841/2013)

**தீர்மான எண் : 1271 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பேக்டர் லாறி எண். TN.75. L-2565–ல் Hydraulic Hosh Leak ஏற்பட்டு காம்பேக்டர் இயக்க முடியாத நிலையில், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி பணியினை சரி செய்த வகையில் ரூ.1,200/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். இ1/1841/2013)

**தீர்மான எண் : 1272 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் குப்பைகளை முறையாக பிரித்து உரத்தினை உடனுக்குடன் அப்புறப்படுத்தவும், துர்நாற்றம் வீசமால் தேங்கியுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தவும், மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/110610/2013, நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இரு மாதங்களுக்கு 10 பணியாளர்களை பணியமர்த்த இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1222 நாள் 29.05.2015–ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இரு மாதங்களுக்கு 10 பணியாளர்களுக்கு கால நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1368/2014)

**தீர்மான எண் : 1273 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும், ஜேம்ஸ் மருத்துவமனை மருத்துவர் மற்றும் ஊழியர்களைக் கொண்டு 16.07.2015 அன்று மருத்துவ சிறப்பு முகாம் நடைபெற்றதில் ரூ.1,251/– செலவு மேற்கொள்ளப்பட்டதற்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். எச்1/2162/2012)

**தீர்மான எண் : 1274 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பேக்டர் லாரி எண். TN.75. L-2565 குப்பைகளை இறக்கிவிட்டு வரும்போது பின்பக்க டயர் புதைந்து விட்டதினால் வாகனத்தை இயக்க இயலாத சூழ்நிலையில் ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி, கிரேன் வாகனம் வரவழைக்கப்பட்டு காம்பேக்டர் லாரி மேலே எழுப்பப்பட்டு வாகனம் இயக்கப்பட்ட வகையில் ரூ.2,500/– செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1841/2013)

**தீர்மான எண் : 1275 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி, டெங்கு காய்ச்சல் நோய்த் தடுப்பு, பன்றி காய்ச்சல் நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அபேட் மருந்து தெளித்தல், வடிகால்கள் துார் வாருதல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள, மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 18 பணியாளர்களை பணியமர்த்த 89 நாட்களுக்கு (ஜுன் மாதம் வரை) இந்நகர்மன்ற தீர்மானம் 1146 நாள் 31.03.2015–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி 18 தினக்கூலிப் பணியாளர்களை மேலும் 89 நாட்களுக்கு (ஜுலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு) கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ.5,40,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** பொது சுகாதார நலன் கருதி, நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணியமர்த்தியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1177/2014)

**தீர்மான எண் : 1276 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தடுப்பூசி பணிகளுக்காக தனியறை அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/– க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1217 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.05% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/876/2015)

**தீர்மான எண் : 1277 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள 10 எண்ணம் தள்ளு வண்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/– க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1223 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.The Southern Solid Waste Management Service, Appattuvilai. | மதிப்பீட்டைவிட 1.00% குறைவு. |
| 2. | M/s.The Walajapet Engg. Service & Co-op. Ltd., Walajapet. | மதிப்பீட்டைவிட 10.00% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Southern Solid Waste Management Service,Appattuvilai நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 1.00% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1018/2015)

**தீர்மான எண் : 1278 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல், மலிக்காகிணறு –ஆசாத்நகர் சாலையில் அமைந்துள்ள வடிகால் ஓடையின் பக்கச் சுவர்களை உயர்த்தி, உடைந்த பகுதிகளை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1215 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.அய்யப்பன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.15% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.அய்யப்பன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/3130/2014)

**தீர்மான எண் : 1279 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் தரை ஓடுகள் பதிக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1225 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.அய்யப்பன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.அய்யப்பன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1180/2015)

**தீர்மான எண் : 1280 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், குடிநீர் வினியோக மண்டலம்–I–க்கான பகுதிகளில் 2015–16–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1219 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |
| 2. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.76% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1779/2015)

**தீர்மான எண் : 1281 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், குடிநீர் வினியோக மண்டலம்–II–க்கான பகுதிகளில் 2015–16–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1219 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |
| 2. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.76% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1779/2015)

**தீர்மான எண் : 1282 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை அங்கன்வாடி மையம் எண்.79–ன் மேற்கூரையில் தரை ஓடுகள் பதித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1214 நாள் 29.05.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 2.85% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1779/2015)

**தீர்மான எண் : 1283 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2015 ஜுலை திங்கள் 31–ம் நாள் (31.07.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கடை, டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்திலுள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகம், கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகளுக்கு 31.07.2015 மாதம் உரிமம் முடிவடைவதால் 01.08.2015 முதல் 31.07.2018 வரை மூன்றாண்டுகளுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும், வாடகை தொகையில் இருந்து15% உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை தொகை | 15% உயர்வு செய்யப்படும் வாடகைதொகை |
|---|---|---|---|---|
| 1 | 39 | C.S. ராஜ் | 632/– | 727/– |
| **கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை** | | | | |
| 1 | 1 | திருமதி. நிர்மலா | 1759/– | 2023/– |
| 2 | 2 | திருமதி. நிர்மலா | 1754/– | 2017/– |
| 3 | 3 | திரு. பி. ஜெகதீஷ் | 1748/– | 2010/– |
| 4 | 4 | திரு. சபீக் அகமது | 1754/– | 2017/– |
| 5 | 5 | திரு. ஞானசேகர் | 1748/– | 2010/– |
| 6 | 6 | திருமதி.பாத்திமா | 1748/– | 2010/– |
| 7 | 7 | திருமதி. கிளாடி | 1759/– | 2023/– |
| 8 | 8 | திரு. பால்தாஸ் | 1743/– | 2004/– |
| 9 | 9 | திரு. பால்தாஸ் | 2208/– | 2539/– |
| 10 | 10 | திருமதி. அஜிதா | 2208/– | 2539/– |
| 11 | 11 | திருமதி. அஜிதா | 2214/– | 2546/– |
| 12 | 25 | திரு. பால்தாஸ் | 1748/– | 2010/– |
| 13 | 33 முதல் 37 வரை | தொலைபேசி நிலைய அலுவலகம் | 6463/– | 7432/– |
| 14 | 16 | திரு.தாஹீர் உசேன் | 1525/– | 1754/– |
| 15 | 26 | திரு.அப்துல் ரஷீம் | 1500/– | 1725/– |
| 16 | 27 | திரு.எம்.அன்வர் அலி | 1500/– | 1725/– |
| 17 | 28 | திரு.எம்.ஷாகுல் ஹமீது | 1500/– | 1725/– |
| 18 | 29 | திரு.எஸ்.அப்துல் காதர் | 1500/– | 1725/– |
| 19 | 30 | திரு.வி.கோபாலகிருஷ்ணன் | 1500/– | 1725/– |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை** | | | | |
| 1 | 5 | திரு.எஸ்.எம். யூசுப் | 1748/– | 2010/– |
| 2 | 6 | திரு. சுல்தான் | 1759/– | 2023/– |
| 3 | 7 | திரு. சுல்தான் | 1748/– | 2010/– |
| 4 | 12 | திருமதி. கலைசெல்வி | 1748/– | 2010/– |

**அ.குறிப்பு :** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.22–க்கு 01.10.2014–ல் உரிமம் முடிவுற்றுள்ளது. அதன் உரிமம் மட்டும் 01.11.2014 முதல் 01.10.2017 வரை உரிமம் நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.அ1/2035/2012)

**தீர்மான எண் : 1284 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கலைஞர் வணிக வளாக கடை எண் 22 –க்கு உரிமம் நீட்டிப்பு செய்வதும் ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுகாதாரப் பிரிவிலிருந்து 10 சுகாதாரப் பணியாளர்களை கொண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினமும் 143 வால்வுகள் Operate செய்யப்பட்டும், 5 எண்ணம் ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டும் வருகிறது. மேலும் குடிநீர் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்காக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்வதற்கும், வால்வு பிட்டுகளை சுத்தம் செய்வதற்கும், நீர்நிலைகளை சுத்தமாக வைப்பதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு (ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை) பணிக்கு அமர்த்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1,20,000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.சுகுமாரன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம்.<br>(ரூ.330/– ) |
| 2. | திரு. C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.61% அதிகம்.<br>(ரூ.332/– ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கு கடந்த மே முதல் ஜுலை வரையிலான மாதங்களுக்கு இந்நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 89 நாட்களுக்கு பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/–க்கு இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/2691/2014)

**தீர்மான எண் : 1285 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில்,“மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்“ பணியின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள 250 கிலோ வாட் திறன் கொண்ட ஜெனரேட்டர் நிறுவுதல் பணிக்கான பிளாட்பாம் அமைத்தல் மற்றும் பொருத்துதல் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 23.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s. Madras Power Corporation,<br>Chennai. | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | M/s.Jaaypee Electricals,<br>Chennai. | மதிப்பீட்டைவிட 10.49% அதிக |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Madras Power Corporation, Chennai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.3,80,000/—க்கு இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) M/s. Madras Power Corporation, Chennai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1619/2015)

**தீர்மான எண் : 1286 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவியில் (Water Purifier) ஏற்பட்டுள்ள பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கருவியின் பழுதினை அவசர அவசியம் கருதி சரி செய்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,000/—க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 23.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s. Elite Aqua Service Nagercoil | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.Rani Home water filter Nagercoil | மதிப்பீட்டைவிட 8.62% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Elite Aqua Service Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,000/—க்கு இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) M/s. Elite Aqua Service Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1620/2015)

**தீர்மான எண் : 1287 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015—ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015—16—ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணிகளில் ஒன்றான இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கொட்டில்பாடு பகுதியில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மீனவர் ஓய்வறை கட்டுதல் பணிக்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.08% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.60% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1 ) மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரத்தை மன்றம் பதிவு செய்யலாம்.

2) திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 1288 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 துறைமுகப் பகுதியில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளீர் சுயஉதவிக் குழு ஆலோசனைக் கூடம் கட்டுதல் பணிக்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.93% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.22% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1088/2015)

**தீர்மான எண் : 1289 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மரமடிப் பகுதியில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மீனவர்கள் ஓய்வறை கட்டுதல் பணிக்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.08% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.60% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1088/2015)

**தீர்மான எண் : 1290 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பண்டாரவிளை பகுதியில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நடுநிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டுதல் பணிக்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.55% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.22% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1088/2015)

**தீர்மான எண் : 1291 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை அரசு தொடக்கப் பள்ளியில் கலையரங்கம் கட்டுதல் பணியினை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.55% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.22% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1088/2015)

**தீர்மான எண் : 1292 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/2175/2015 நாள் 09.07.2015–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் பொதுமக்கள் தேவைக்காக கலையரங்கம் கட்டுதல் பணியினை ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில்

மேற்கொள்வதற்காக 29.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.12% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.05% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.12% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1088/2015)

**தீர்மான எண் : 1293 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந.நி.IV ) துறை அரசாணை (நிலை) எண்.99 நாள் 14.07.2015—ன்படியும், நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் தொலைபேசி செய்தியில், 01.08.2015 முதல் 07.08.2015 வரை உலக தாய்ப்பால் ஊட்டும் வாரம் கடைபிடிக்கப்படுவதால், அதனடிப்படையில் ஒரு முன்னோடித் திட்டம் கடைப்பிடிப்பதன் பொருட்டு, பாலூட்டும் தாய்மார்களுக்கு தனியறை அமைக்கும் பணியினை மேற்கொண்டு பணி முடிவுற்ற புகைப்படத்தினை 30.07.2015—க்குள் அனுப்புவதற்கு தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தில் Aluminium Anodised —ல் Partition Wall அமைத்து மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் இருக்கை வசதி மேற்கொள்ளவும், மேலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஸ்டிக்கர்கள் ஒட்டும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.90,000/— க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1666/2015)

**தீர்மான எண் : 1294 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் கடற்கரை பகுதியில் கி.பி.1741 ஜூலை 31—ல் நிறைவுபெற்ற குளச்சல் கடல் போர் வெற்றியின் நினைவாக திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா அவர்களால் குளச்சல் கடற்கரையில் வெற்றித்தூண் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி வெற்றியின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 31—ம் நாள் குளச்சல் கடல் போர் வெற்றி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 02.08.2015 அன்று நடைபெறவுள்ள வெற்றி விழாவை முன்னிட்டு மேற்படி வெற்றித்தூண் அமைந்துள்ள பகுதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.30,000/—க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1709/2015)

**தீர்மான எண் : 1295 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சியில் தற்போது உள்ள குறைவான துப்புரவு பணியாளர் பணியிடங்களைக் கொண்டு நகராட்சியின், அத்தியவாசிய பணியான பொதுசுகாதார பணிகளை துரிதமாக செயல்படுத்த சிரமமான நிலையில் உள்ளது, எனவே, காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண் 19860/12/கே3 நாள் 04.06.2012—ல் தெரிவிக்கப்பட்டபடி மொத்த வருவாயில் ஊதிய செலவினம் 49

விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும் என்றும், 49 விழுக்காட்டிற்கு அதிகமாக இருந்தால் அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், தற்போது காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்ய தற்போது ஊதிய செலவினம் 49 விழுக்காட்டிற்கு மேல் இருப்பதால், இப்பணியிடங்களை பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, தற்போது காலியாக உள்ள எட்டு துப்புரவு பணியாளர் பணியிடங்களில் நான்கு பணியிடங்களை நிரப்ப அரசு ஆணை எண் 1 (4டி) நாள் 17.01.2013–,ன்படி அனுமதிக்கப்பட்டது. இப்பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக பட்டியல் பெற்று நிரப்பும் பணி நடவடிக்கையில் உள்ளது. மேலும், மீதமுள்ள நான்கு துப்புரவு பணியாளர் பணியிடங்களும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால், இப்பணியிடத்திளை பூர்த்தி செய்ய 49 விழுக்காட்டினை வலியுறுத்தாது, சிறப்பினமாக கருதி பூர்த்தி செய்ய அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நான்கு துப்புரவு பணியாளர் காலிபணியிடங்களை நிரப்ப நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.218/2013/சி1)

**தீர்மான எண் : 1296 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை(நிலை) எண் 82, நாள் 25.05.2015–ன்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ், ''ஏழை மகளிரைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான புதிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்'' செயல்படுத்தும் விதமாக, 2011–ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், இணைப்பில் உள்ள 74 நபர்கள் முதல் கட்ட பயனாளிகளாக இந்நகராட்சிப் பகுதியில் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பயனாளிகளின் விருப்பத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், வாழ்வாதாரப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது, பயனாளிகள் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். சஅ/1399/2015)

**தீர்மான எண் : 1297 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி